# இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
# நத்தார் விழாவைக் குறித்த அறிக்கை 2016

நத்தார் விழா என கொண்டாடப்படும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பானது ஒரு நம்பிக்கையின் கொண்டாட்டமாகும். அரசியல், பொருளாதார, சமூக, சமய ரீதியான சுமைகளினால் நசுக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு, வாழ்வின் சுமைகளை சுமந்த ஏழை, வறியோர் தங்களுக்கு விடுதலை தரும் மெசியா ஒருவர் வருவார் என எதிர்பார்த்திருந்த காலத்திலேயே இயேசு பெருமானின் பிறப்பு இடம்பெறுகிறது. அத்தோடு பாவ சுமைகளிலிருந்தும், துன்பத் துயரத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் இந்த மெசியா தம்மை விடுவிப்பார் என அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர். அந்த 'நம்பிக்கையே' இப்பிறப்பின், இக் கொண்டாட்டத்தின் அடித்தளமாக இன்றுவரை அமைகிறது.

வாழ்வின் போராட்டங்களின் மத்தியில், வாழ்வின் உரிமைக்கான ஏக்கம் கொண்ட மக்களாக யுத்தம் முடிவுற்ற ஒரு காலக்கட்டத்தில் வாழும் இலங்கையர்களாகிய எமக்கு இந்த 'நம்பிக்கையின்' பொருத்தம் தெளிவாக உள்ளது. கிறிஸ்மஸ் விழாவிற்கு பின்னணியத்தில் உள்ள விடியலின் நம்பிக்கையே, கிறிஸ்து பெருமானின் பிறப்பை மகிழ்வுடன் கொண்டாடவும், எமது அயலவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் எம்மை தூண்டுகிறது. எனவே, இந்த நம்பிக்கையின் அடித்தளத்தை மூழ்கடித்து, துரிதமாக வியாபாரமையமாக்கப்பட்டு வரும் இவ்விழாவினைக் குறித்து ஒரு எச்சரிப்பை விடுப்பது எமது தலையாய கடமையாகும். வெளிப்புற கிறிஸ்மஸ் அலங்காரங்கள், உச்ச அளவில் விளம்பரப்படுத்தப்படும் போலித்தனமான களியாட்டங்கள் போன்ற செயற்பாடுகள் கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான விழுமியங்களை சாகடிக்கின்றன. எனவே, இந்த விழாக்காலத்தில் எமது மக்களை சற்று நிதானித்து, சிந்தித்து, இக்காலத்தில் எம்மை சுற்றியுள்ள துன்பப்படும் மக்களின் அழுகுரல்களுக்கும் வேதனைகளுக்கும் செவிமடுக்குமாறு வேண்டுகிறோம்.

இத்தகைய போலி களியாட்டத்திற்கு உடந்தையாக, காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டு வரும் உலகின் உயர்ந்த நத்தார் மரத்தைக் குறித்து நாம் கவலையடைகிறோம். இந்த இராட்சத நத்தார் மரம் அமைக்கப்பட்டுள்ள இடமும் குழப்பகரமானதும், அபாயகரமானதுமாய் இருக்கிறது. இதன் ஆடம்பரமும், அலங்காரமும் 'துறைமுகப்பட்டிண' அபிவிருத்தியின் பின்னணியிலுள்ள மனித பாவத்தின் மேட்டிமையை சூட்சிகரமாக மூடிமறைக்கிறது. இந்த அபிவிருத்தித் திட்டமானது பல கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது இருக்கின்ற அதே வேளையில், எமது சுற்றாடலையும், எமது மக்களின் வாழ்வாதாரத்தையும், இடம்பெயர் மக்கள் மேலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் மறுக்கலாகாது.

இந்த பின்னணியத்தில் தான், தேசிய கிறிஸ்தவ மன்றமானது, இயேசு பெருமானின் பிறப்பை மகிழ்வுடன் கொண்டாடும் அதே நேரத்தில், அதன் புனிதத்தையும், உண்மையான ஆன்மீகத்தையும் பேணி, திருமறையின் போதனைகளில் வேர்கொண்டு கொண்டாடும்படி தமது மக்களை அழைக்கிறது.

"குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" (லூக்கா 2: 12)

எனவே, எமதாண்டவரின் பிறப்பைக் கண்டடையத்தக்க இடத்தில் அவரை தேடுவோம். அநாவசிய வீண்விரயத்தைத் தவிர்ப்போம். போலி கொண்டாட்டத்தைத் தவிர்ப்போம். காலிமுகத்திடலில் அமைத்துள்ள மிக உயர்ந்த நத்தார் மரத்தின் மாய வலையிலிருந்து விடுவித்துக் கொள்வோம். பெரும் கோவில்களிலும், பெரும் மாளிகைகளிலும் தரிசிப்பதைத் தவிர்த்து, மனித வேதனைகளை சித்தரிக்கும் மாட்டுக் கொட்டில்களில் அவரை தரிசிப்போம். கீழ்மட்டத்தில் தள்ளப்பட்டு, தமது வாழ்வின் மாண்பிற்காக ஏங்கித் தவிக்கும் ஏழை எளியோருடன் நாம் இந்த நத்தார் கொண்டாட்ட காலங்களில் ஒன்றிப்போம்.

**கையொப்பமிட்டுள்ளோர்:**

- அருட்திரு.சமன் பெரேரா- தலைவர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் மற்றும் தலைவர், இலங்கை பிரஸ்பட்டேரியன் திருச்சபை
- பேராயர் அதிவண.டிலோராஜ் ஆர். கனகசபை- இலங்கைத் திருச்சபை, கொழும்பு மறைமாவட்டம்
- பேராயர் அதிவண.அருள் அறிவர்.டேனியல். எஸ். தியாகராஜா- யாழ் மறைமாவட்ட பேராயர், தென்னிந்திய திருச்சபை
- அருட்திரு. ஆசிறி. பி. பெரேரா- தலைவர்/ பேராயர், இலங்கை மெதடிஸ்த திருச்சபை
- அருட்திரு.பிரியந்த விஜேகுணவர்தன- தலைவர், இலங்கை பெப்டிஸ்ட் சங்கம்
- அருட்திரு.ஸ்டேன்லி நெல்சன்- தலைவர், கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை
- ஆணையாளர் அலிஸ்டர் பென்டர்- பிராந்திய தளபதி, இரட்சண்ய சேனை
- அருட்திரு. ஜி. நடராஜா- தலைவர், இலங்கை லுத்திரன் திருச்சபை
- அருட்திரு.மைக்கல் திசாநாயக்க- தலைவர், மக்கள் தேவ சபை, இலங்கை
- அருட்திரு.லெஸ்லி கீகல்- தலைவர்- நாற்சதுர சுவிசேஷ திருச்சபை, இலங்கை
- வண.எம்.நிமல் விக்கிரமரட்ன- குருமுதல்வர், இலங்கைத் திருச்சபை, குருணாகலை மறைமாவட்டம்
- அருட்திரு.டபிள்யூ.பி. எபனேசர் ஜோசப்- பொதுச் செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்

**ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்:**

- இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு (YMCA)
- இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு (YWCA)
- கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம்
- இலங்கை வேதாகம சங்கம்
- கிறிஸ்தவ இலக்கிய சங்கம்
- இலங்கை இறையியல் கல்லூரி
- சத்திய வசனம்
- கொழும்பு இறையியல் கல்லூரி
- கிறிஸ்துவுக்கான இளைஞர் அமைப்பு

2016 நவம்பர் மாதம் 15ம் திகதி